# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


'தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**முறையீட்டு மனு (மூ.மு) எண்.1712/ஊராட்சி /2018**

**ஆணை நாள்: 19–12–2018**

பூ. குமார்,
நெ. 175, குளக்கரை தெரு,
அகூர் கிராமம். - மனுதாரர்

திரு. சாரங்கபாணி,
ஊராட்சி செயலாளர்,
அகூர் கிராமம்,
மைலம் ஒன்றியம். - எதிர்மனுதாரர்

## ஆணை

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், நெ. 175, குளக்கரை தெரு, அகூர் கிராமத்தில் வசிக்கும் திரு. பூ. குமார், அவருடைய 14.12.2018 நாளிட்ட மனுவில் அவருக்கு PMAY (G) குடியிருப்பு திட்டத்தின் கீழ் கடந்த 2016-17 ஆம் ஆண்டு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவர் அதை கட்டி முடித்துவிட்டதாகவும், அவர் மனைவி மகாலட்சிமி பெயரில் அதற்குண்டான தொகை கடந்த 15.12.2017ல் அன்று ரூ.26,029/- ம், 24.4.2018 அன்று ரூ.26,715/-ம் 05.05.2018 அன்று ரூ.26,681/- ம், மற்றும் 27.8.2018 அன்று ரூ.40,575/-ம் தீவனூர் கிளை, சவுத் இந்தியன் வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டு, அவர் மனைவிக்கு தெரியாமல், வங்கியிலிருந்து வங்கியின் மேலாளர், ஊராட்சி செயலாளர் திரு. சாரங்கபாணி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் கூட்டாக சேர்ந்து கட்டாத வீட்டிற்கு மோசடியாக பணத்தை எடுத்துள்ளனர் என்றும், தற்போது வரை கூரை வீட்டில் வசித்து வருவதாகவும், இத்திட்டத்தின்கீழ் எந்த வீடும் கட்டப்படவில்லையெனத் தெரிவித்து, இந்த

ஊழலுக்கு பொறுப்பான ஊராட்சி செயலாளர் திரு. சாரங்கபாணி அவர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு 7-ன்படி 'உள்ளாட்சி அமைப்பு' என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரர் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பலாம் என முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும், இப்பொருள் குறித்து விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை-600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்:

திரு. பூ. குமார்,
நெ. 175, குளக்கரை தெரு,
அகூர் கிராமம் மற்றும் அஞ்சல்,
திண்டிவனம் வட்டம் - 604 207.

நகல்:

1. மாவட்ட ஆட்சித்தலைவர்,
   விழுப்புரம் மாவட்டம்,
   விழுப்புரம் - (இணைப்புகளுடன்).
2. மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
3. செயலாளர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
4. ஊராட்சி உதவி பிரிவு அலுவலர்.